## அந்நிய நகரம்

தூக்கத்தில் நடக்கும் ஒருவனைப் போல
அந்நிய நகரத்தில் நான்.
இதுவரை பார்த்திராத விலங்கு ஒன்றைத்
தடவிக் கொடுக்க முயல்வதுபோல
நகரத்தை நான் நெருங்குகிறேன்.
நகரம் தனது ரகசிய காமிராவில்
என்னைக் கண்காணித்துக் கொண்டே இருக்கிறது.
ஒவ்வொரு சந்திப்பிலும் பிரிவு
ஒரு விதைபோல வேர்விட்டுக் கொண்டிருக்கிறது.
திரும்பிப் போவதற்காகவே வந்திருக்கிறேன் என்பதை
தெருவோர சங்கீதங்கள் எனக்குத் தெரிவிக்கின்றன.
கேட்டிராத சத்தங்கள் பார்த்திராத வண்ணங்கள்
மரங்கள், தெருக்கள் , வீடுகள் , பறவைகள்
எதுவுமே எனக்குச் சொந்தமில்லை.
என்னைச் சுற்றிலும் நகைக்கத் தெரிந்த விலங்குகள்
நடமாடிக் கொண்டிருக்கின்றன.
அவர்கள் உண்பது, உறங்குவது,
சூதாடுவது, காதல் செய்வது எல்லாமே
ஏதோ ஒரு விநோதச் செயல் போலத் தெரிகிறது.
யாருக்கு நாம் சொந்தம் ? யார் நம்மை நேசிக்கிறார்கள்?
யார் நம்மைப் புறக்கணிக்கணிக்கிறார்கள்?
யார் நம்மைக் கொள்ளையடிக்கக் காத்திருக்கிறார்கள்?
எல்லாம் புரிவதற்குள் விசாவின் காலம்
முடிந்து விடுகிறது.
நான் வாழும் இந்த பூமியும்கூட
போவதற்காகவே வந்திருக்கும் ஒரு அந்நிய நகரம்

என்பதை ஏன் எனக்கு யாருமே ஞாபகப்படுத்தவில்லை.? --- 24 ஆகஸ்டு 2020

